செ.வெ.எண்:944 நாள்: 25.10.2010

## புதுப்பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட 'சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி' மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை அண்ணாநகர் சிந்தாமணி வணிக வளாகத்தில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் முற்றிலும் குளிரூட்டப்பட்ட 'சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி'யை இன்று (25.10.2010) காலை 11.00 மணி அளவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கோ.சி.மணி அவர்கள் திறந்து வைத்தார். விழாவில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப. சென்னை மண்டல கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு இரா.ஜெயராம், பண்டகசாலையின் தனி அலுவலர் திருமதி இரா.சித்ரா மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

விழாவில் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழக அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், உயிர் காக்கும் மருத்துவத்தில் போலியான மற்றும் காலாவதியான மருந்துகளை கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழக முதல்வர் ஆணையின்படி கூட்டுறவுத் துறை சார்பில் கூட்டுறவு மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது எனவும்

அதன் தொடர்ச்சியாக அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்தவும், மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருட்களை வழங்கும் நோக்கத்துடனும் கூட்டுறவு சிறப்பங்காடிகள் தொடங்கப்பட்டு செயல்படுவதாகவும் தெரிவித்தார். இன்று தொடங்கப்பட்டுள்ள சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் மக்களுக்கு அன்றாடம் தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தும் தரமாகவும் நியாயமான விலையிலும் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனை பொது மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் தரமான ஸ்டாண்டர்டு பட்டாசு வகைகள் நியாயமான விலையில் சிந்தாமணியில் விற்பனை செய்யப்படுவதாகவும்,இதனை பொது மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9